**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 1154/2024**
**வழக்கு சாட்சி PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பெரியசாமி | தாலுகா | : | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | : | இராமைய்யா | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | திரிகூடபுரம் | வயது | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 10th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் திரிகூடபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 என்னுடைய மகன்கள். 21.05.2024 அன்று கோவில் திருவிழா முன்விரோதம் காரணமாக இரவு 01.30 மணியளவில் என்னுடைய ஊரில் தெருவில் வைத்து என்னுடைய மகன் ராஜசேகரன் என்பவரை எதிரிகள் தகாத வார்த்தைகளினால் திட்டினார்கள். ஊர்மக்கள் விலக்கிவிட்டார்கள். கொஞ்ச நேரம் கழித்து கம்பு வைத்து எதிரி உதயகுமார், ராஜசேகரின் தலையில் அடித்தார். இதர எதிரிகள் கையால் ராஜசேகரனின் முதுகிலும், முகத்திலும் கீழே தள்ளிப்போட்டு அடித்தார்கள். காலால் மிதித்தார்கள். என்னுடைய மகன் மயக்கமடைந்தார். பின்னர், என்னுடைய மகனின் நண்பர்கள் பைக்கில் வைத்து கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டு, அங்கு முதலுதவி எடுத்து விட்டு பின்னர் மேல்சிகிச்சைக்காக 108 ஆம்புலன்சில் தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

அங்கிருந்து, திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கு 13 நாட்கள் என்னுடைய மகன் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.10 17:48:44 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : CC.No. 1154/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-7</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இளங்கோ | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சந்திரன் | தொழில் | : | மாணவர் |
| கிராமம் | : | சொக்கம்பட்டி | வயது | : | 22 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 10th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் சொக்கம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் எம்.பி.ஏ படித்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். உறவினர்கள். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் என்னுடைய உறவினர்கள். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.10 17:48:49 +0530